Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.STC. 347/2024 DW-1**

Name : உண்மைவிளம்பி
Father / Husband name : மனுவேல்
Village : திண்டிவனம்
Age : 80
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 27.01.2026

Complainant present. Accused present. Both side counsel present.

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை ( நேரம் 04.21 - 04.40 )**

1. வங்கியில் காசோலை கொடுக்கும்போது புத்தமாக கொடுப்பார்கள், தனித்தனியாக கொடுக்கமாட்டார்கள் என்றால் சரிதான். அவ்வாறு இருக்கையில் காசோலை தனியா தொலைந்துபோவதற்கு வாய்ப்பில்லை என்றால் சரியல்ல, காசோலையை நான் காரில் வைத்திருந்தேன். காசோலை காணவில்லை என்று காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான், வங்கியில் புகார் கொடுத்தேன். நான் வங்கியில் நேரடியாக சென்று புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, தபால் மூலமாக அனுப்பி, நேரடியாக சென்றேன். என்மீது புகார்தாரர் தாஸ் ரோசனை காவல் நிலையத்தில் பணத்தை திருப்பிக்கொடுக்கவில்லை என்று புகார் கொடுத்துள்ளாரா என்றால் அவ்வாறு கொடுக்கவிலை நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளுமாறு காவல் நிலையத்தில் சொன்னார்கள்.

2. தற்போது என்னிடம் காட்டப்படும் சிஎஸ்ஆர் ரசீது புகார்தாரர் கொடுத்த புகாருக்கு கொடுக்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் சிஎஸ்ஆர் ரசீது புகார்தாரர் என்மீது மீண்டும் 27.12.2023 அன்று கொடுத்த புகாருக்கு கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. எ.சா.ஆ. 3

வழக்கறிஞர் அறிவிப்பில் புகார்தாரரிடம் ரூ.5,00,000/- பெற்றுக்கொண்டு செலுத்தியதாக உள்ளது என்றால் அந்தத்தொகையும், காசோலை தொகையும் வெவ்வேறு ஆகும். எ.சா.ஆ.3 வழக்கறிஞர் அறிவிப்பில் ரோசணையை சேர்ந்த மகாகதிர் என்பவரின் காசோலையை புகார்தாரரை வைத்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் காசோலை கொடுத்ததை ஒப்புக்கொண்டு, அதை குறித்து வங்கிக்கு கடிதம் அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல, காசோலை தொலைந்ததால் அனுப்பியுள்ளேன்.

3. புகார்தாரரிடம் கடன் வாங்கியபோது எனக்கு சொந்தமான காரின் ஆர்சி புக் மற்றும் பாண்டு ஆகியவற்றை கொடுத்து கடன் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் ஆர்சிபுக் அசல் என்னுடையது என்றால் சரிதான். **அந்த ஆர்சிபுக்கின் அசல் ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** தற்போது என்னிடம் காட்டப்படும் வெற்று பாண்டிலுள்ள கையொப்பம் என்னுடையது என்றால் சரிதான், 2019 - 2020 வருடத்தில் வீடுகட்டுவதற்காக வாங்கியது ஆகும். **வெற்று பாண்டிலுள்ள எனது இரண்டு கையொப்பங்கள் ம.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** புகார்தாரருக்கும் எனக்கும் கொடுக்கல் வாங்கல் இருந்ததாக நான் சொல்லவில்லை என்றால் எனது கணவர் இருக்கும்போது வாங்கியதாக சொல்லியுள்ளார். காசோலையில் கையொப்பம் செய்து நான் புகார்தாரருக்கு கொடுத்தேன், அப்போது மேற்படி ஆவணங்களை கொடுத்தேன் என்றால் சரியல்ல. அதற்கான வீடியோ ஆதாரம் புகார்தாரரிடம் உள்ளது என்றால் சரியல்ல. நான் புகார்தாரரிடம் ரூ.5,00,000/-

வாங்கியது உண்மை, பணத்தை தரக்கூடாது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது.**

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு
செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு
அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என்
முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.